**பாரம்பரிய காய்கறிகள் சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலான விருதுகள் – 2023-24**

**<u>வழிகாட்டு நெறிமுறைகள்</u>**

- பாரம்பரிய காய்கறிகள் சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகளுக்கான விருதிற்கு சொந்த/குத்தகை நிலத்தில் பாரம்பரிய காய்கறிகள் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் பங்குப்பெறலாம்.
- துறை இணையத்தளமான www.tnhorticulture.tn.gov.in மற்றும் மாவட்ட அலுவலங்களில் விவசாயிகள் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம். விவசாயிகள் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை வட்டாரம்/மாவட்ட அலுவலங்களில் சமர்பிக்க வேண்டும்.
- பூர்த்தி செய்த விண்ணப்பங்களை பெற்று மாவட்ட குழுவின் ஆய்விற்கு சமர்பிக்க வேண்டும். மாவட்ட குழுவானது மாவட்ட ஆட்சியர் தலைமையில், தோட்டக்கலை இணை/ துணை இயக்குநர், மாவட்ட ஆட்சியர் அலுவலக நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆகியோர் அடங்கிய மாவட்ட அளவிலான தேர்வுக்குழு, மாவட்ட அளவிலான விருது பெறும் இரண்டு விவசாயிகளை ஆய்வு செய்து தேர்ந்தெடுக்க வேண்டும்.
- விவசாயிகள் 1. அதிக பாரம்பரிய காய்கறி இரகங்களை மீட்டெடுதல் 2. பிற விவசாயிகளிடம் பாரம்பரிய காய்கறி விதைகளை கொண்டு சேர்த்தல் 3. நீர் மேலாண்மை 4. முறையான மண்வள மேம்பாடு 5. அங்கக முறையில் விதைகளை மீட்டெடுத்தல் ஆகிய காரணிகளின் அடிப்படையில் மாவட்ட அளவிலான நிபுணர் குழுவின் மூலம் தேர்வு செய்யப்படுவர்.
- மாவட்ட அளவிலான விருது வென்றவர்கள் மாவட்ட ஆட்சியரால் அறிவிக்கப்படுவார்கள். அரசு நிகழ்வு/ விழாக்களின் போது சான்றிதழ்களுடன் வங்கி வரையோலையாக (DD) விருது வழங்கப்பட வேண்டும். முதல் பரிசாக ரூ. 15,000/- ம், இரண்டாம் பரிசாக ரூ. 10,000/- ம் சான்றிதழுடன் வழங்கப்படும்.